DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

SINGAMPUNARI

C.C. No. 79 /2020 PW . 4

பெயர் : வாணி **தந்தை/கணவர் பெயர்: ராஜசேகர்**

ஊர் : **தாலுகா:**

வயது : **தொழில்:**

ஜாதி : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.05.2025

(1, 2 எதிரிகள் ஆஜர்.

29.05.2025 முதல் விசாரணை:

1. நான் ஏ.தெக்கூர் கிராமத்தில் வசிக்கிறேன். விவசாயம் வேலை செய்கிறேன். அ.சா1 தெரியும். எங்கள் பகுதியை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் அதே தெருவை சேர்ந்தவர்கள். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

2. கடந்த 08.01.2019ம்தேதி காலை சுமார் 7 மணியளவில் அ.சா.1 அலறல் சத்தம் கேட்டு நான் சென்று பார்த்த போது எதிரிகள் அ.சா.1 உடன் தகராறுசெய்து கல்லை வைத்து அ.சா.1யை அடித்து உருட்டுகட்டையால் 1வது எதிரி அ.சா.1ன் இடது தோள்பட்டையில் தாக்கியும், பெண் என்று பாராமல் கொடுமைப்படுத்தியதாகவும் 2வது எதிரி அ.சா.1யை தாக்கி கொலைமிரட்டல் விடுத்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.